Annexure - II

253

<u>தமிழ்நாடு அரசு</u>

<u>சுருக்கம்</u>

கோயம்புத்தூர் மாவட்டம் – கோயம்புத்தூர் வடக்கு வட்டம், விளாங்குறிச்சி கிராமம் – புல எண்.426/1 முதலானவற்றில் 14.05 ஏக்கர் நிலம் – மருத்துவக் கல்வித்துறையிடமிருந்து மீளப்பெற்று எல்காட் நிறுவனத்திற்கு உரிமை மாற்றம் செய்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

<u>வருவாய்(நிமு.5(2)) துறை</u>

<u>அரசாணை (நிலை) எண். 268</u> <u>நாள் 2.6.2004</u>

<u>படிக்க:</u>

1) மாவட்டாட்சியர், கோயம்புத்தூர் கடித எண் 53684/2003, ஆ4, நாள் 13.11.2003
2) சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கடித எண். பி3 / 30916 / 2003, நாள் 28.1.2004

***

<u>ஆணை:</u>

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், விளாங்குறிச்சி கிராமத்தில் அரசினர் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் புல எண்.426/1,2, 427 மற்றும் 436 இல் 12.05 ஏக்கர் நிலத்தில் தகவல் தொழில் நுட்ப பூங்கா அமைக்க உரிமை மாற்றம் செய்யுமாறு எல்காட் நிறுவனம் கேட்டுள்ளதென மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் கோயம்புத்தூர் மாவட்டாட்சியர் கூறியுள்ளார். மேற்படி பூங்காவிற்கு அணுகுபாதை அமைக்க 1.55 ஏக்கர் நிலத்தையும் உரிமை மாற்றம் செய்யுமாறு அந்நிறுவனம் கேட்டுள்ளதெனவும் கூறியுள்ளார். பிரஸ்தாப புலம் கிராம ஆவணங்களில் "மருத்துவக் கல்லூரி நிலம்" என உள்ளது; மாநகராட்சியின் எல்லைக்குள் உள்ளது; என்றும் ஆனால் இதுவரை கோயம்புத்தூர் மாநகராட்சியின் இசைவு பெறப்படவில்லை என்றும் மருத்துவக்கல்வித்துறையின் இசைவும் பெறப்படவில்லை என்றும் மாவட்டாட்சியர் கூறியுள்ளார். உரிமை மாற்றம் குறித்து 25.9.2003 அன்று அ1 விளம்பரம் பிரசுரிக்கப்பட்டதில் ஆட்சேபணை எதுவும்பெறப்படவில்லை; புலத்தில் புராதனச் சின்னங்கள் வழிபாட்டுத்தலங்கள் உயர்மின் அழுத்தக் கம்பிகள் எதுவுமில்லை என்று அவர் கூறியுள்ளார். நிலத்தின் மதிப்பு பற்றிக் குறிப்பிடுகையில் ஆவண எண்.2120/2003 நாள் 14.7.2003 இன்படி ஒரு சென்ட் நிலத்தின் மதிப்பு ரூ.27,443/– ஆகிறது; உரிமை மாற்றப் புலமான 14.05 ஏக்கர் நிலத்தின் மதிப்பு ரூ.3,85,57,415/– ஆகிறது என்றும், வழிகாட்டிப்பதிவின் படியிலான மதிப்பு ச.அடி ஒன்று ரூ.45/– எனவும் சார் பதிவாளர் தெரிவித்ததாக மாவட்டாட்சியர் கூறியுள்ளார். இந்நிலம் கல்லூரியின் பயன்பாட்டில் இல்லை எனவும் கூறியுள்ளார். எனவே, கோவை வடக்கு வட்டம், விளாங்குறிச்சி க.ச.426/1 இல் 1.70 ஏக்கர் 426/2 இல் 7.10 ஏக்கர் க.ச.427 இல் 3.70 ஏக்கர் ஆக மொத்தம் 12.50 ஏக்கர் மென்பொருள் பூங்காவிற்காகவும், க.ச.461/1 இல் 0.10 ஏக்கர் 426/3 இல் 0.52 ஏக்கர், 463/1 இல் 0.39 ஏக்கர் 465/1 இல் 0.30 ஏக்கர், 466/3 இல் 0.24 ஏக்கர் ஆக மொத்தம் 1.55 ஏக்கர்



தபா..

அணுகுசாலைக்காகவும் (12.50 + 1.55 = 14.05 ஏக்கர்) ஆக மொத்தம் 14.05 ஏக்கர் நிலத்தினை உட்பிரிவுக் கட்டணம், கல்கட்டணம் நிலமதிப்பு ஆகியவைகளை செலுத்துவதன் பேரில் எல்காட் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யலாம் என மாவட்டாட்சியர் பரிந்துரை செய்துள்ளார்.

2. மாவட்டாட்சியரின் பரிந்துரையை மேலனுப்பி 1987 இல் அரசு மருத்துவக் கல்லூரிக்கென 153.21 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது என்றும் தற்போது மேற்படி நிலம் அக்கல்லூரியின் பெயரில் பதிவாகியுள்ளது என்றும் உரிமை மாற்றத்திற்கு மருத்துவக் கல்வி இயக்குநரின் இசைவு பெறப்படவில்லையென்றாலும் எல்காட் நிறுவனம் மற்றும் இயக்குநர் மருத்துவக் கல்வி ஆகியோர் கூட்டுப்புலத்தணிக்கை செய்து முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளமையால் மருத்துவக் கல்வித்துறையின் இசைவு பெறப்பட்டதாகக் கொள்ளலாம் என்று சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் கூறியுள்ளார். 3.10.2003 அன்று தலைமைச் செயலர் நடத்திய உயர்மட்டக்குழுவின் முடிவின்படி எல்காட் நிறுவனத்திற்கு தகவல் தொழில் நுட்ப பூங்கா அமைக்க 12.50 ஏக்கர் நிலம் அளிக்கப்பட்ட வேண்டும் என்றும் அதற்கு அணுகுபாதை வசதியும் அளிக்கவேண்டும் என அவர் கூறியுள்ளார். எனவே, கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம் விளாங்குறிச்சி கிராமம் புல எண்.426/1,2, 427, 461/1, 462/3, 463/1, 465/1 மற்றும் 466/3 இல் 14.05 ஏக்கர் நிலத்தை அரசு மருத்துவக் கல்லூரியிடமிருந்து மீளப்பெற்று தகவல் தொழில்நுட்ப பூங்கா அமைக்கும் பொருட்டு எல்காட் நிறுவனத்திற்கு நிலமதிப்பாக ரூ.3,85,57,415/- கல்கட்டணம், உட்பிரிவுக் கட்டணம் ஆகியவற்றை வசூலித்துக்கொண்டு வருவாய் நிலையாணை எண் 24 இன்கீழ் உரிமை மாற்றம் செய்யலாம் என சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் பரிந்துரை செய்துள்ளார்.

3. கோயம்புத்தூர் மாவட்டாட்சியர் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் அறிக்கைகளை ஆராய்ந்து பிரஸ்தாப புலம் அரசு மருத்துவக் கல்லூரிக்கென கையகப்படுத்தப்பட்ட போதிலும் கல்லூரியின் பயன்பாட்டிற்கு தேவையில்லை; அரசின் பிறிதொரு உபயோகத்திற்குத் தேவைப்படுவதால் அதைத் திரும்ப முந்தைய உரிமையாளர்களுக்கு அளிக்கவேண்டியதில்லை (Reconveyance) என்பதால் பின்வருமாறு அரசு ஆணையிடுகிறது:-

அ) கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், விளாங்குறிச்சி கிராமம் புல எண்கள் 426/1,2, 427, 461/1, 462/3, 463/1, 465/1 மற்றும் 466/3 இல் 14.05 ஏக்கர் நிலத்தை கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரியிடமிருந்து மீளப்பெற்று தகவல் தொழில் நுட்ப பூங்கா அமைக்கும் பொருட்டு எல்காட் நிறுவனத்திற்கு வருவாய் நிலையாணை எண் 24 இன்கீழ் உரிமை மாற்றம் செய்யப்படுகிறது;

ஆ) உரிமை மாற்றம் செய்யும் நாளில் நிலவும் சந்தை மதிப்பு, கல்கட்டணம், உட்பிரிவுக் கட்டணம் ஆகியவற்றை கேட்பு நிறுவனத்திடமிருந்து வசூல் செய்யப்படவேண்டும்;

இ) நில உரிமை மாற்றம்தொடர்பாக அரசு விதிக்கும் நிபந்தனைகளுக்கு உட்படவேண்டுமெனவும், எந்த நோக்கத்திற்காக நிலம் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றதோ அதற்காக மட்டுமே நிலத்தைப் பயன்படுத்த வேண்டுமெனவும் கேட்பு நிறுவனம் அறிவுறுத்தப்படுகிறது.

ஈ) பிரஸ்தாப நிலமோ அல்லது அதன் ஒரு பகுதியோ எதிர்காலத்தில் தேவையில்லையெனில் அதை வருவாய்த்துறைக்கு ஒப்புவிக்க வேண்டும் என கேட்பு நிறுவனம் அறிவுறுத்தப்படுகிறது.

4. இவ்வாணையினைச் செயல்படுத்த ஆவன நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்டாட்சியர், கோயம்புத்தூர் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஆகியோர் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

நகேந்திரதேவன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை–5
மாவட்டாட்சியர், கோயம்புத்தூர்.
நிர்வாக இயக்குநர், எல்காட், 692, அண்ணாசாலை, நந்தனம், சென்னை–35
இயக்குநர், மருத்துவக்கல்வி, சென்னை–35
நகல்:
தகவல் தொழில்நுட்பத்துறை/மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை/நிதித்துறை, சென்னை–9
துணைச்செயலர்(நிமு) அவர்களின் நேர்முக உதவியாளர், வருவாய்த்துறை, சென்னை–9
வருவாய்(அநமு3) துறை, சென்னை–9

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

2/6/04
பிரிவு அலுவலர்.
02/6/04